# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

FRANCE TEDC -FRANCE

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

FRANCE TEDC -FRANCE

## 2024

## வளர்தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

FRANCE TEDC -FRANCE
FRANCE TEDC -FRANCE

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. இலங்கைத்தீவில் முதன்முதலில் காலடி எடுத்து வைத்த ஐரோப்பியர்

அ) ஆங்கிலேயர் ☐ ஆ) ஒல்லாந்தர் ☐

இ) போர்த்துக்கேயர் ☐ ஈ) சிங்களவர் ☐

2. கிளிநொச்சியின் வடக்கே யாழ்ப்பாணம் உள்ளது. இச்சொல்லியம் உணர்த்துவது

FRANCE TEDC -FRANCE

அ) நீங்கற்பொருளை ☐ ஆ) ஒப்புப்பொருளை ☐

இ) ஏதுப்பொருளை ☐ ஈ) எல்லைப்பொருளை ☐

3. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) இடர் ☐ ஆ) களிப்பு ☐

இ) மகிழ்ச்சி ☐ ஈ) பேருவகை ☐

4. உறங்கினான் என்பதன் வினையடி

அ) உறங்கிய ☐ ஆ) உறங்கு ☐

இ) உறங்கி ☐ ஈ) உறங்கியது ☐

FRANCE TEDC -FRANCE

5. ஐ என்ற எழுத்தின் இன எழுத்து

அ) உ ☐ ஆ) எ ☐

இ) இ ☐ ஈ) ஈ ☐

6. அறமே என்றும் எமக்கு உறுதுணையாகும். இங்கு உறு என்பது

அ) வினைச்சொல் ☐ ஆ) உரிச்சொல் ☐

இ) இடைச்சொல் ☐ ஈ) திசைச்சொல் ☐

7. வேலவன் கூலிக்கு வேலை செய்தான். இங்கு வந்துள்ள வேற்றுமை

அ) இரண்டாம் வேற்றுமை ☐ ஆ) நான்காம் வேற்றுமை ☐
இ) ஏழாம் வேற்றுமை ☐ ஈ) ஐந்தாம் வேற்றுமை ☐

8. சத்திமுற்றப்புலவர் ________ மன்னனைக் காணச் சென்றார்.

அ) பாண்டிய ☐ ஆ) சேர ☐
இ) சோழ ☐ ஈ) பல்லவ ☐

FRANCE TEDC -FRANCE

9. உலகில் நன்முறையில் வாழ வழிகாட்டும் வாழ்க்கை வழிகாட்டி

அ) புறநானூறு ☐ ஆ) தொல்காப்பியம் ☐
இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) திருக்குறள் ☐

10. 'அந்தக் கோடரிக்காம்பை எங்கிருந்தாலும் என் வாளுக்கு இரையாக்குவேன். மன்னரை மீட்கும் வரை ஓயமாட்டேன்' எனக் கூறியவர்

அ) இரண்டகன் ☐ ஆ) மன்னன் ☐
இ) வருணன் ☐ ஈ) ஆளுநர் ☐

FRANCE TEDC -FRANCE

11. "சிறியரே மதிக்கும் இந்தச்
செல்வம்வந் துற்ற ஞான்றே...." என்ற பாடலைப் பாடியவர்

அ) புகழேந்தி ☐ ஆ) சேக்கிழார் ☐
இ) கம்பர் ☐ ஈ) தேவராசப்பிள்ளை ☐

12. பூவிழி தாயகத்தில் வாழும் தனது உறவினருக்கு உதவினாள். இதில் ஏழாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) தாயகம் ☐ ஆ) உதவினாள் ☐
இ) உறவினர் ☐ ஈ) வாழும் ☐

13. அழைத்தான் என்பதன் இடைநிலை

அ) ஆன் ☐ ஆ) த் ☐

இ) அழை ☐ ஈ) அன் ☐

14. முற்றுப்பெறாமை என்ற கருத்தை விளக்கும் இணைமொழித்தொடர்

அ) ஆட்டமும்ஓட்டமும் ☐ ஆ) அருமைபெருமை ☐

FRANCE TEDC -FRANCE

இ) அரைகுறை ☐ ஈ) அறம்மறம் ☐

15. குறுகிய ஓசையுடைய எழுத்துகளை ______________ என அழைப்பர்.

அ) மெய்யெழுத்துகள் ☐ ஆ) உயிரெழுத்துகள் ☐

இ) குற்றெழுத்துகள் ☐ ஈ) நெட்டெழுத்துகள் ☐

16. இலங்கையில், போர்த்துக்கேயரைப் போரில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியவர்கள்

அ) ஆங்கிலேயர் ☐ ஆ) ஒல்லாந்தர் ☐

இ) பறங்கியர் ☐ ஈ) களப்பிரர் ☐

FRANCE TEDC -FRANCE

17. முன்பு மணிபல்லவம் என அழைக்கப்பட்ட இடம்

அ) நயினாதீவு ☐ ஆ) கச்சதீவு ☐

இ) நெடுந்தீவு ☐ ஈ) காரைதீவு ☐

18. பொன் + சிலை என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) பொற்ச்சிலை ☐ ஆ) பொன்சிலை ☐

இ) பொன்ச்சிலை ☐ ஈ) பொற்சிலை ☐

19. மண்ணை உழுவதற்குப் பயன்படும் கருவி

அ) மண்வெட்டி ☐ ஆ) கடப்பாரை ☐

இ) கலப்பை ☐ ஈ) கோடரி ☐

20. வாரணம் என்ற சொல்

அ) இயற்சொல் ☐ ஆ) திரிசொல் ☐

இ) வடசொல் ☐ ஈ) திசைச்சொல் ☐

FRANCE TEDC -FRANCE

21. பிறரும் வாழவேண்டும் என நினைப்பவன் நல்லன். இதில் நல்லன் என்பது

அ) தெரிநிலைவினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) குறைவினை ☐ ஈ) செயப்பாட்டுவினை ☐

22. ஐந்து அறக்கொள்கைகளுள் இடம்பெறாதது

அ) கொல்லாமை ☐ ஆ) பொய்யாமை ☐

இ) நிலையாமை ☐ ஈ) கள்ளாமை ☐

FRANCE TEDC -FRANCE

23. எட்டாம் வேற்றுமையை ______________ என்றும் அழைப்பர்.

அ) எழுவாய்வேற்றுமை ☐ ஆ) கொடைவேற்றுமை ☐

இ) இடவேற்றுமை ☐ ஈ) விளிவேற்றுமை ☐

24. நாட்டிய மங்கையர்போல தலைசாய்த்து ஆடிய பயிர்

அ) நெல் ☐ ஆ) சோளம் ☐

இ) குரக்கன் ☐ ஈ) வரகு ☐

25. திரிதல் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தமிழ்ப்புலவர்
ஆ) வட்டமேசை
இ) முட்செடி
ஈ) பூமரம்

26. வினைப்பகுபதத்தில் காலங்காட்டும் உறுப்பு

அ) பகுதி
ஆ) விகுதி
இ) இடைநிலை
ஈ) சாரியை

FRANCE TEDC -FRANCE

27. பிறந்தநாள் விழாவில் சிறுவர்கள் இனிப்பு உண்டனர். இச் சொல்லியம் குறிக்கும் ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர்
ஆ) குணவாகுபெயர்
இ) சினையாகுபெயர்
ஈ) இடவாகுபெயர்

28. அல்பேர்ட் சுவைட்சர் ________________ நாட்டைச் சேர்ந்தவர்.

அ) இத்தாலி
ஆ) பிரித்தானியா
இ) சேர்மனி
ஈ) இந்தியா

FRANCE TEDC -FRANCE

29. உயர்திணைப் பன்மை விகுதி

அ) அர்
ஆ) ஆன்
இ) ஆர்
ஈ) ஆள்

30. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச்சொல்

அ) கொலுசு
ஆ) கோப்பை
இ) சாக்கு
ஈ) குசினி

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்பாடு எனப்படுவது பயிர் விளைகின்ற நிலத்தை உழுது பண்படுத்துவது போல மக்கள் தம் வாழ்க்கையினை நெறிப்படுத்துவதே ஆகும். தமிழருடைய பண்பாடும் அத்தகையதே. அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற விடயங்களைப் பின்பற்றி வாழ்வதே வாழ்க்கைப் பண்பாடாகும். அறத்தின் வழிவாழுதல் தமிழர் பண்பாடாகும். இதனை வள்ளுவர்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

என்ற குறளில் தமிழர் பண்பாடு அறம் சார்ந்தது என உலகுக்கே எடுத்துக் கூறுகின்றார். வரவேற்றல் என்கிற பண்பாடு இன்முகம் காட்டி வரவேற்று; உண்ண உணவளித்து; வாசல் வரை சென்று வழியனுப்பி வைத்தல் தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகளாகும். இவ்வாறு வந்தாரை வரவேற்று மகிழ்விக்கும் செய்திகள் பாரிமன்னன், அதியர்மான் போன்றோரின் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. மேலும் இன்சொல் பேசுதல், பெற்றோரை மதித்தல், உயிர்களிடத்தில் அன்பு கொள்ளுதல், செய்ந்நன்றி மறவாமை போன்றவை மங்காத தனிப்பெருமை கொண்டவையாக இன்றும் தமிழரிடையே விளங்குகின்றன.

FRANCE TEDC -FRANCE

1. தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகள் எவை?

_______________________________________________

2. எதன் வழிவாழுதல் தமிழர் பண்பாடாகும்?

_______________________________________________

FRANCE TEDC -FRANCE

3. வந்தாரை வரவேற்று மகிழ்விக்கும் செய்திகள் யாருடைய வரலாற்றில் இடம்பெற்றுள்ளன?

_______________________________________________

4. பண்பாடு எனப்படுவது யாது?

_______________________________________________

5. தமிழர் பண்பாடு அறம் சார்ந்தது என உலகுக்கே எடுத்துக் கூறியவர் யார்?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. போர்த்துக்கேயரினால் இலங்கையில் 1619 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட அரசு எது?

______________________________________________

2. 'கோவேத' என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

FRANCE TEDC -FRANCE

______________________________________________

3. பழம்படு பனையின் கிழங்கு பிளந்தது போன்ற அலகை உடைய பறவை எது?

______________________________________________

4. சங்கிலியனை மாற்றானிடம் காட்டிக் கொடுத்தவன் யார்?

______________________________________________

FRANCE TEDC -FRANCE

5. 'தமிழர் பண்பாட்டுக் கழகம்' என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர் யார்?

______________________________________________

6. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு அமைந்துள்ள இடம் எது?

______________________________________________

7. மீனவர்கள் எதைக் கொண்டு காலமறிந்து கடலோடுகின்றனர்?

______________________________________________

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## திறமை

| | | | | |
|---|---|---|---|---|
| இணங்க | வளர்க்க | பிறரை | பற்றும் | மதிக்க |

FRANCE TEDC -FRANCE

அன்பை வளர்க்க வேண்டும்
அறிவைப் பெருக்க வேண்டும்
உன்போற் __________________ எண்ணி - நல்ல
உதவி புரிய வேண்டும்

அன்னை சொற்கேட்க வேண்டும் - தந்தை
ஆணைக்கு __________________ வேண்டும்
தன்னைத்தான் உணர வேண்டும் - பிறர்
தம்மை __________________ வேண்டும்

FRANCE TEDC -FRANCE

ஆசிரியர்க்கு அடங்கியே - நீ
அறிவை __________________ வேண்டும்
தெய்வ நினைப்பு வேண்டும் - நல்ல
தேசப் __________________ வேண்டும்

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆறு ஒன்று சலசலத்து ஓடுகின்றது. அது செல்லும் வழிகள் தோறும் மரங்கள் செழித்துக் காணப்படுகின்றன. மக்கள் இரு மருங்கிலும் உள்ள காவிருக்கையில் இருந்து பேசி மகிழ்கின்றனர். தூரத்திலே நீர் குடிக்க வந்த மான்களின் ஒலி கேட்டுப் பற்றைக்குள் இருந்த முயல்கள் துள்ளித்துள்ளி ஓடுகின்றன. சிறுவர்கள் அவ் ஆற்றில் நீந்தி மகிழ்கின்றனர். சிறுவர்கள் எறியும் உணவுகளைக் கொத்தித் தின்பதற்காகப் பறவைகள் அங்கும்இங்கும் பறந்து திரிகின்றன.

FRANCE TEDC -FRANCE

1. இடைச்சொல் ஒன்று எழுதுக.

______________________________

2. இங்கு வந்துள்ள இணைமொழியைத் தருக.

______________________________

3. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

FRANCE TEDC -FRANCE

4. அஃறிணைப் பன்மை வினைமுற்று ஒன்று எழுதுக.

______________________________

5. 7ஆம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கண்டறிந்து எழுதுக.

______________________________

புள்ளிகள் 10

**ஆ)** 1. வேற்றுமைகள் எத்தனை? ஆறாம் வேற்றுமை உருபு இடம்பெறுமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

FRANCE TEDC -FRANCE

2. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினா எழுத்துகள் எவை?

புள்ளிகள் 03

3. சொற்களைப் பிரித்து எழுதுக.

புத்தாண்டு

வாட்போர்

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 02

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

கலைத்த    களைத்த    மனம்    மணம்    ஒலி    ஒளி

இன்று ஆடிப்பிறப்பு. இது தமிழர் வாழ்வில் சிறந்த நாளாகும். இல்லங்கள் தோறும் பெண்கள் உரலில் அரிசி இடிக்கும் ____________ கேட்கிறது. கதிரவனின் ____________ மறையும் வேளையில் பெண்கள் ஆடிக்கூழ் காய்ச்சத் தொடங்குகின்றனர். கூழின் நறு ____________ நாவூற வைக்கிறது. அதை முகர்ந்தவாறு எல்லோரும் ____________ மகிழ்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். ஓடிச் சென்று பலாவிலைகளைப் பொறுக்கிக் ____________ சிறுவர்கள் அவற்றை அன்னையிடம் கொடுத்தனர். எல்லோரும் பலாவிலையில் ஆடிக்கூழ் குடித்து மகிழ்கின்றனர்.

FRANCE    TEDC -FRANCE

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

பெற்றோர்கள் எமக்கு நல்ல வழிகாட்டிகள். அவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நாம் நடக்க வேண்டும். அவர்கள் எமது நலனுக்காக இரவுபகல் பாராது உழைக்கின்றனர். எனவே நாங்கள் நற்பண்புள்ளவர்களாக வாழ்வதுடன் நன்றாகப் படித்து வாழ்வில் உயர்வடைய வேண்டும்.

FRANCE    TEDC -FRANCE

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 05

**8) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிறைவு செய்க.**

1. அச்சாணி இல்லாத் ______________________ முச்சாணும் ஓடாது.

2. சிறு துரும்பும் ______________________ உதவும்.

FRANCE TEDC -FRANCE

3. குடிப்பது கூழ் கொப்பளிப்பது ______________________ .

4. கையில் வெண்ணெய் ______________________ நெய்க்கலையாதே!

5. அளவுக்கு மிஞ்சினால் ______________________ நஞ்சு.

FRANCE TEDC -FRANCE

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- புலவரும் வறுமையும்
- போர்த்துக்கேயர் இலங்கையில் வேரூன்றிய வரலாறு
- ஒலிம்பிக் விளையாட்டுகள்

FRANCE TEDC -FRANCE

- இலையுதிர்காலமும் பனிகாலமும்

புள்ளிகள் 15

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE

FRANCE TEDC -FRANCE